வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# சங்க இலக்கியம் உணர்த்தும் பரதவர்களின் வாழ்வியல் செய்திகள்

**முனைவர் கா.ஜான் கென்னெடி**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,

தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620002

**முன்னுரை**

மனித வாழ்க்கையின் இயல்பான வாழ்க்கை முறையை இயற்கையோடு அமைத்துக் கூறுவது சங்க இலக்கியங்கள் ஆகும். அவற்றுள் அக இலக்கியம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. அதிலும் சொல்லவேண்டிய கருத்துக்களை முறைமுகமாகச் சொல்லும் வழக்கம் பழந்தமிழர்களிடையே இருந்துவந்துள்ளன. அவை உள்ளுறை, இறைச்சி என்னும் குறிப்புப் பொருளாக வந்துள்ளன. மேலும், அவ்விலக்கியங்களைத் திணை அடிப்படையில் ஆராய்ந்த முன்னோர்கள் திணைக்குரிய முதல், உரி பொருள்கள் மூலம் அக்காலமக்களின் வாழ்வியலைப் புலப்படுத்தியுள்ளனர். நெய்தல் திணையில் தலைமக்களான பரதவர்களைப் பற்றிஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகஅமைகின்றது.

**ஆய்வுச் சுருக்கம்**

நெய்தல் நில மக்களின் வாழ்க்கை முறை, தொழில் முறை, அவர்கள் செய்தும் தொழில்களின் அடிப்படையில் எவ்வகையான பெயர்களால் அழைக்கப்பட்டனர். மேலும் அவர்களின் வாழ்க்கைமுறையில் ஏற்பட்ட நன்மை, தீமைகள் எதிர்கொண்ட வாழ்க்கைச் சிக்கல்களையும் வெளிப்படுத்தும் தன்மையில் இக்கட்டுரை ஆராய்ப்பட்டுள்ளன.

**அருஞ்சொற்பொருள்**

பரதவர் - Fisher Mam, கோட்பறை - The drum beaten when Fishing Doctrine, உமணர் - Salt maker's

**ஐந்திணைப் பாகுபாடுகள்**

"மாயோன் மேயகாடுறைஉலகமும்
சேயோன் மேயமைவரைஉலகமும்

வேந்தன் மேயதீம்புனல் உலகமும்

வருணன் மேயபெருமணல் உலகமும்

முல்லைகுறிஞ்சிமருதம் நெய்தல் எனச்

சொல்லியமுறையால் சொல்லவும் படுமே'' (தொல்,பொருள், அகத்திணையியல்,நூ – 951.)குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்படும் ஐவகை நிலப்பாகுபாட்டில் ஒவ்வொரு நிலத்துக்குமெனத் தனிப்பட்ட பண்பும், நாகரீக சிறப்பும் காணப்படுகின்றன.

**ஐவகை நில அமைப்பில் நெய்தல் நிலம்**

உலகிலுள்ள நிலப்பரப்பு என்பது இயற்கை அமைப்பில் எவ்வாறு அமைந்து காணப்படுகின்றன என்றால்; காடு, மலை, வயல், கடற்கரை, பாலைவனம் என்னும் ஐந்துவகையில் அடங்கும் உலகுக்கே உரிய இவ்வைந்து அமைப்பும் தமிழகத்தில் உண்டு. அந்தந்தநிலங்களில் வளரும் மரம், செடி, கொடி, புள், பூண்டு முதலியவற்றால் அந்நிலத்தின் தன்மையை அறியமுடிகிறது.

நெய்தல் என்பது கடலும் கடல் சார்ந்த இடமாகும். இதனை 'வருணன் மேய பெருமணல் உலகமும்' என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு நிலத்திலும் நடந்த போராட்ட வாழ்வைப் போலவே நீரிலும் மனிதர்கள் போராடினர். நிலத்தில் போராடியவர்கள் வேடர்கள்; நீரில் போராடியவர்கள் பரதவர்கள் ஆவார்கள். இவர்கள் மீன் பிடிதொழிலை தனது தொழிலாக கொண்டவர்கள்.

நெய்தல் நிலத்தில் வாழ்ந்தமக்கள் நுளையர்,பரதவர் எனப்பெறுவர். இவர்கள் மீன்வேட்டையாடும் பொருட்டுக் கடல்மேற் செல்பவராவர். காலையில் சென்று இவர்கள் அந்தியில் வீடுதிரும்பும் வரைதலைவியர் தம் இல்லத்தில் துன்பமும், இரக்கமும் தோன்ற இருப்பர்.

இந்நிலத்திற்குரிய கருப்பொருட்களை, "நெய்தற்கு உணாமீன் விலையும், மாஉமண்பகடு போல்வன, முதலையும், சுறாவும் மீனாதலின் மாவென்றா மரபன்று, மரம் புன்னையும் ஞாழலும் கண்டலும், புள் அன்னமும், அன்றிலும் முதலியன. பறைமீன் கோட்பறை, தொழில் மீன்படுத்தலும், உப்பு விளைத்தலும், அவை விற்றலும் யாழ் நெய்தல் யாழ், ஊர் பட்டினமும் பாக்கமும்'' என கு. வெ. பா சங்க இலக்கியக் கொள்கை என்ற நூலில் நெய்தல் திணைக்குரிய கருப்பொருளகளைப் பற்றி எழுதியுள்ளார்.

**பரதவர் வாழ்வுநிலைகள்**

நெய்தல் நிலத்தில் வாழும் பரதவமக்கள் ஆடம்பரமற்ற சிறுகுடிவாழ்க்கையை உடையவர்களேயாயினும் அவர்களித்தே உயர்ந்த பண்புகளைக் காணமுடிகின்றது.

**பரதவர் குடிலின் அமைப்புகள்**

மூங்கில் கோல்களை வரிசையாகச் சார்த்திவஞ்சி, காஞ்சி ஆகிய மரங்களின் வெண்மையான கொம்புகளை இடைஇடையே விரவிப் பொருத்தி தாழைநாரினைக் கொண்டு வலித்துக்கட்டி, மேலே தருப்பைப்புல் வேய்ந்த குறுகிய தாழ்வாரம் இறக்கி அமைந்த குடிசை தாழ்வாரத்தில் மீன்பெய்யும் பனை ஓலையால் செய்த பறிதொங்கி அசைந்து கொண்டிருக்கும். மேலும், குடிசையையொட்டி புன்னைக் கொம்புகளைக் கால்களாய் நட்டுக்கட்டிய சிறுபந்தர் அதில் சுரை போன்ற கொடிகள் செழித்துப் படர்ந்து காய்கள் தொங்கிகொண்டிருக்கின்றன. என்பதை,

“வேழம் நிரைத்துவெண்கொடுவிரைஇ
தாழைமுடித்துத் தருப்பைவேய்ந்த
குறியிறைக் குரம்பைபறியுடை முன்றில்
கொடுங்காற் புன்னைகோடு துமித்து இயற்றிய
பைங்காய் தூங்கும் பாய்மணற் பந்தர்” (பெரும்பாணாற்றுப்படை, 263-267) என்றபாடல் வரிகள் நெய்தல் நிலமக்கள் வாழ்ந்த வீட்டினைக் காட்சிப்படுத்தும் செய்தியை விளம்புகிறது.

**வாழும் மக்கள் செய்திகள்**

‘பரதவர்’ ‘நுளையர்’ என்னும் சொற்கள் ஓரினத்தவரைக் குறிப்பன. இவர்களின் கடலோடும், தொழிலில் பெரும்பாலும் பரதவரையே குறிப்பிடுகின்றனர். நுளையரும், வலையரும் வலை வீசுதலும், மீன்பிடித்தலுமாகிய தொழில்களைச் செய்பவர் என்று குறிப்பிடலாம்.

**பரதவர் பற்றிய செய்திகள்**

பரதவர் அல்லது பரதர் என்போர் தமிழகத்தின் மிகத்தொன்மையான சாதியினர் பாண்டிய வம்சத்தைத் தோற்றுவித்தவர்கள் இவர்களே. மீன் கொடியினைக் கொண்டு முதல் தமிழ் அரசை தோற்று வித்தவர்கள் பரதவர்கள் இயற்கைச் சீற்றங்களால் எல்லை மாறுதல்கள் ஏற்பட்டபோது போர் மறவர்களாக மாறி மற்ற அரசுகளை வீழ்த்தி ஏகாதிபத்தியம் நிலைநாட்டியவர்கள். பல நூற்றாண்டுகளாக பரதவர்களாகவும், மறவர்களாகவும் நாடாண்டவர்கள் பரத பாண்டியர்கள். முத்துக்குளித்தல், மீன்பிடி, உப்பு விளைத்தல், சங்கறுத்தல், கடல் வாணிபம் என பல்வேறு தொழில்களல் பல உட்பிரிவுகளாக பிரித்தார்கள்.

**பழம் குலப் பெயர்கள்**

பரதவர்களிடையே குருகுலம், வருணகுலம், குகன்குலம், ஆரிய நாட்டார் கங்கை நாட்டார், சிந்து நாட்டார், சிவன் படையினர் போன்ற தொன்மப் பெயர்கள் வழக்கில் உண்டு. இதில் ஒருபெயரான ஆரியன் என்ற பெயர் சோழநாட்டு பட்டினவரைக் குறிக்கும் பெயராகும் இது இன்றும் வழக்கில் உள்ளன. துறைமுகங்களில் வாழும் பரதவர்களை பட்டினத்தவர்கள் என அழைப்பர். குருகுலத்தில் இருந்து உதித்த இன்னொருகுலமே வருணகுலம் ஆகும். பட்டினவர் தொழில்களாக கடல் ஓடுதல், கடல் வாணிபம் செய்தல். கடற் கடைவீரர்களாக அரசப்படைகளில் வணிக களங்களில் கடற்படையில் பணி செய்தார்கள்.

**இலக்கியத்தில் பரதவர்**

கடலும் கடல் சார்ந்த பகுதியில் வாழும் நெய்தல் நில மக்களாக பரதவர் குறிக்கப்படுகின்றனர். இவர்கள் சில இடங்களில் பரவர் எனவும் குறிப்பிடப்படுகின்றனர். தென்தமிழ்நாட்டில் கிழக்குகரையில் அமைந்த காவிரி நதிப்படுகைக்கைகும், தாமிரபரணி ஆற்றிற்கும் இடைப்பட்ட பகுதியில் இச்சமூகம் வாழ்ந்ததை அடையாளம் காணமுடிகிறது. இவை தற்கால திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதி எனக் கூறலாம். தாலமி சோழ நாட்டிற்கும், பாண்டிய நாட்டிற்கும் இடைப்பட்ட கடல் சார்ந்த பகுதியில் வாழ்ந்த மக்களை 'பதை' என கூறுகிறார். இது பரதவரைக் குறிக்கலாம். பாண்டிய நாட்டு செல்வமாக இருந்த முத்துப் பற்றியும் சங்க இலக்கியத்திலும், வடமொழி இலக்கியத்திலும் பல குறிப்புகள் உள்ளன. முத்துக் குளித்தலைப் போல் சங்கு குளித்தலும் முக்கிய தொழில்களாக விளங்கியது. பரதவர் சங்குகளுக்காக கடலுள் மூழ்கியதையும், அவற்றைக் கள்ளுக்காக விற்றது பற்றியும் அகநானூறு (அகம் - 296.) பாடல் செய்திகளைக் கூறுகிறது.

பரதவர் கடலில் இருந்து எடுத்த உப்பை உமணர் உள்நாட்டில் விற்பனை செய்தனர். **நற்றிணையில்** உமணர் வருகையை எதிர்பார்த்து உழாத உழவர் (பரதர்) உப்பைக் குப்பைகளாக வைத்துக் காத்திருந்தனர் என்பதை,

"உவர் விளை உப்பின் குன்றுபோல் குப்பை
மலை உய்த்துப் பகரும், நிலையா வாழ்க்கை
கணம் கொள் உமணர் உயங்குவயின் ஒழித்த
பண் அழி பழம் பார் வெண்குருகு ஈனும்
தண்ணம் துறைவன், முன் நாள், நம்மொடு
பாசடைக் கலித்த கணைக்கால் நெய்தல்

பூவுடன் நெறிதரு தொடலை தைஇ
கண் அறிவுடைமை அல்லது நுண் வினை
இழைஅணி அல்குல் விழவு ஆடுமகளிர்
முழங்கு திரை இன்சீர் தூங்கும்
அழுங்கல் மூதூர் அறிந்தன்றோ இன்றே” (நற்றி – 138.)

இப்பாடல் உமணர் பற்றி குறிப்பிடுகின்றது.

**புறநானூற்றில்** ‘தென்பரதவர் மிடல் சாய’ என்ற சொற்தொடர்களும், பாண்டி நெடுஞ்செழியனை, ‘கொற்றவன்’ பரதவ தலைவன் எனவும் கூறப்படுவது சங்க கால அரசியலிலும், சமூகத்திலும் பரதவர்க்கிருந்த மதிப்பைக் காட்டுகின்றது.

சங்க இலக்கியத்தில் வரும் திரையர் என்ற இனக் குழுவைக் குறித்தெனக் கொண்டால் அச்சொல்லான ‘திரை’ என்ற சொல்லுக்குக் ‘கடலோடிகள்’ என்ற பொருளே மகிப் பொருத்தமாக அமைகிறது. கடற்களைக் குப்பங்களிலும், பக்கங்களிலும் வசித்த நெய்தல் நிலத்து மக்கள் பரதவர் என்றும் பட்டினவர் என்றும் பெயர் பெற்றனர் என்பது தெளிவு.

பரதவருள் நாவாய் செலுத்தும் சிறந்த மாலுமிகளும் உண்டு. அவர்களில் சிலர் ஆழ்ந்த கடலில் முத்துகுளித்து, முத்து எடுக்கும் தொழில் அறிந்த நன்மக்களாகவும் விளங்கினர் என பட்டினப்பாலை கூறுகின்றது.

பரதவர் பகற் காலத்தில் கடலுக்குச் சென்று மாலை மயங்கும் நேரத்தில் வீடு திரும்புவது உண்டு. அவர்கள் இரவிலே விளக்குகளை ஏற்றிக் கொண்டு கடலிலே சென்று சுறாமீன்களை வேட்டையாடி, வைகறையிலே திரும்புவதும் உண்டு, என்பதை,

“இலங்கிரும் பரப்பின் எறிசுறா நீக்கி
வலம்புரி மூழ்கி வான்றிமிற் பரதவர்” (அகம், பா. 350.)

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

பரதவர் கடலில் சென்று கொணர்ந்த இறால் மீன்களையும் கொழுமீன்களையும் மக்கள் உணவாகக் கொள்வர். சங்க பாடல்களில் பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, புறநானூறு, ஆகிய புறத்திணைப்பாடல்களில் 120 வரிகளும், நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குநுறூறு, கலித்தொகை ஆகிய அகத்திணைப் பாடல்களில் 410 பாடல்களும் பரதவர் குறித்துப் பேசுகின்றன.

பரதவர் பற்றி **புறநானூற்றில்,**

“திண்திமில்வன் பரதவர்” (புறம், பா. 24)

**பட்டினப்பாலையில்,**

"புன்தலை இரும்பரதவர்" (பட்டின, பா. அடி. 90)

**நற்றிணையில்,**

"கானலம் சிறுகுடிக் கடல்மேற் பரதவன்" (நற்றி, பா.4)

"மீன்ஏறி பரதவர்" (நற்றி, பா.45)

"வரவுக் கடல் உழந்த பெருவலைப் பரதவர்" (நற்றி, பா.63)

"இருங்கழித் துழாவும் பனித்தலைப் பரதவர்" (நற்றி, பா.373)

**குறுந்தொகையில்,**

"நுண்வலைப் பரதவர்" (குறுந், பா. 184)

"கொடுந்திமில் பரதவர் கோட்டுமீன் எறிய" (குறுந், பா. 304)

"பெருங்கடல் பரதவர்" (குறுந், பா. 320)

**அகநானூற்றில்,**

"பழந்திமில் கொன்ற பரதவர்" (அகம், பா. 10)

"பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்" (அகம், பா. 140)

"நாள் வலை முகந்த கோள்வல் பரதவர்" (அகம், பா. 300)

"வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர்" (அகம், பா. 350)

என்னும் பாடல் வரிகள் மூலம் பரதவர்கள் பற்றியச் செய்தியை அறியமுடிகிறது.

**மீனவர்களின் தலைமக்களை அழைக்கும் முறைகள்**

சங்க காலத்தில் மீனவர்களின் தலைவர்களாக வாழ்ந்தவர்கள், 'புலம்பன்' 'சேர்ப்பன்' 'துறைவன்' 'கொண்கன்' என்னும் பெயர்களால் அழைப்பட்டனர் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

திரையர்

திரையர் என்ற அரசன் தொண்டை நாட்டை ஆண்டதாகவும், அவனுக்குப் பின் இளந்திரையன் ஆண்டதாகவும் குறிப்பிடுவர். 'திரை' என்பது 'அலை' என்ற பொருள்படும். அலைகளால் கொணரப் பெற்றவர் என்ற கதை வழங்குவதற்கு மாறாக அயலகடல் உடைய கடற்கரைப் பகுதியை ஆண்டவர் என்றே கருதப்படுகிறது.

**வலையர்**

நாடோடிகளாகத் திரிந்த பாணர்கள் மீன்களைப் பிடித்து விற்றுவாழத் தொடங்கிய போது நிலையாக மருத் நில ஊர்களில் தங்கதிக் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர். அப்போது அவர்களை 'வலையர்' என்று சங்க இலக்கியம் குறிப்பிட்டுள்ளது. வலைஞரும், பாணரும், பரதவரும், நுளையரும் தொழில்

முறைமையால் வேறுபட்டவரொயினும் இனமுறையால் வேறுபட்டவரெனக் கருதவழியில்லை. என்பதை,

“கோடை நீடினும் குறைப்பட வறியாத்
தோடழ் குளத்து கோடு காத்திருக்கும்
கொடுமுடி வலைஞர்” (பெருபாண், பா. அ, 272-274) என்ற பாடல் அடிகளில் வாயிலாக அறிய முடிகிறது.

**உமணர்கள்**

பெரிய வண்டியில் உப்பை மட்டுமின்றித் தம் வீட்டு பொருள்களையும் ஏற்றிக் கொண்டு உள்நாட்டுக்குள் நெடுந்தொலைவு சென்று விற்பனை செய்தவர்கள் உமணர்கள் ஆவார். இவர்களைப் பற்றி செய்திகள் பெரும்பாலும் பெரும்பாணாற்றுப்படையிலும் சிறுபாணாற்றுப்படையிலும் அறியமுடிகிறது.

**முடிவுரை**

சங்க இலக்கியத்திலும் காலத்திலும் சரி நெய்தல் நில மக்கள் கடலை தெய்வமாக மதிக்கின்றனர். இவர்களின் வாழ்க்கைமுறை சிக்கல், மகிழ்ச்சி இரண்டும் கலந்தநிலை காணப்படுகிறது. இவர்கள் பல பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் இக்கட்டுரை வெளிப்படுத்துகின்றன.

**துணைநின்ற நூல்கள்**

1. இளங்குமரன், இரா., -தமிழர் வாழ்வியல் இலக்கணம், அமிழ்தம் பதிப்பகம், சென்னை.
2. சாமிநாதையர், உ.வே., - பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.
3. சிதம்பரனார், சாமி, - எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், இலக்கிய நிலையம், சென்னை.